# தொலைக்கல்வி மையம்
# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

பல்கலைப்பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024.

தொலைபேசி : 0431-2407027, 2407028

முனைவர். **R.** பாபு ராஜேந்திரன்
இயக்குநர் (பொ)


பார்வை: தொ.க.மை/பி.எட்./2016-2017 நாள்: 21.11.2016

அன்புடையீர்,

பாரதிதாசன் பல்கலைக்கழக தொலைக்கல்வி மையம் வழியாக 2016-17ஆம் ஆண்டிற்கான இளம் கல்வியியல் பட்டப்படிப்பு (**B.Ed.**) சேர்க்கைக்கு தாங்கள் *பொது பிரிவினர் /பிற்படுத்தப்பட்டோர் /பிற்படுத்தப்பட்டோர் முஸ்லீம்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/தாழ்த்தப்பட்டோர்/தாழ்த்தப்பட்டோர் (அருந்ததியர்)/ பழங்குடியினர்/மாற்றுத் திறனாளிகள்/முன்னாள் இராணுவத்தினர்* என தமிழக அரசின் இனசுழற்சி அடிப்படையின் கீழ் தற்காலிகமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள்.

சேர்க்கை தொடர்பான கலந்தாய்வு வரும் கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காலத்தில் பல்கலைப்பேரூர் வளாகத்தில் உள்ள பல்கலைக்கழக குளிர்மை அரங்கில் ***(AC Auditorium*)** நடைபெறவுள்ளது. இக்கடிதம் கிடைக்கப்பெற்ற மாணவர்கள் தவறாமல் கலந்தாய்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், மேற்குறிப்பிட்ட தேதியில் தாங்கள் வர இயலவில்லையெனில், தாங்கள் தங்கள் சேர்க்கையை இழக்க நேரிடும் என்ற தகவலும் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

| **DATE** | | | |
|---|---|---|---|
| 01-12-216 | | 02-12-2016 | |
| **9.30 am** | **1.00pm** | **9.30 am** | **1.00pm** |

கலந்தாய்விற்கு வரும்பொழுது மாணவ/மாணவியர்கள் கீழ்க்கண்ட ஆவணங்கள்/சான்றிதழ்களின் உண்மைப்படிவம் **(Original Certificates)** மற்றும் ஒளிநகல் படிவத்தை **(Xerox Copy of the Certificates)** தவறாமல் கொண்டு வரவேண்டும். அவ்வாறு கொண்டு வர தவறினால் சேர்க்கை மறுக்கப்படும்.

01. 10-ஆம் வகுப்பு மற்றும் +2 படிப்பிற்கான சான்றிதழ் அல்லது 11 ஆம் வகுப்பு மற்றும் **PUC** படிப்பிற்கான சான்றிதழ்.
02. இடைநிலை ஆசிரிய பயிற்சிக்கான சான்றிதழ் **(D.T.Ed) or B.P.Ed**
03. இளநிலை பட்டச்சான்றிதழ் (**Degree Certificate**) மற்றும் மதிப்பெண் பட்டியல்.
04. முதுநிலை பட்டச்சான்றிதழ் மற்றும் மதிப்பெண் பட்டியல் (பொருளியல், சமூகவியல், உளவியல், வணிகவியல் மற்றும் மனையியல் மாணவ/மாணவியர்கள் மட்டும்).
05. பல்கலைக்கழக விதியின்படி, இளம் கல்வியியல் (**B.Ed.**) படிப்பிற்கான சேர்க்கைக்கு அனுபவச் சான்றிதழ் (**Service Certificate**) சமர்ப்பிக்கப்பட வேண்டும். தவறினால் சேர்க்கை நிராகரிக்கப்படும்.

06. இனச் சான்றிதழ் (**Community Certificate**).

07. மாற்றுத் திறனாளிகள் அதற்கான தகுதி பெற்ற மருத்துவரிடமிருந்து பெற்ற சான்றிதழ்

08. முன்னால் இராணுவத்தினர் / வாரிசுதாரர்கள் (**Ex-servicemen**) என்பதற்கான தகுதிபெற்ற நபரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ்.

09. அஞ்சல் தலை வடிவ நிழற்படம **( Stamp Size Photograph )** ஒன்று.

கலந்தாய்விற்கு வரும் மாணவ/மாணவியர்கள் தங்கள் பெயர் அழைக்கப்படும்போது அறையில் கட்டாயம் இருக்க வேண்டும். சேர்க்கைக்கு வரும் மாணவ/மாணவியர்கள் கீழ்க்கண்ட கல்விக்கட்டணத் தொகை மற்றும் அனைத்துக் கட்டணங்களையும் சேர்த்து ரொக்கமாக செலுத்தலாம். **SBI** வங்கி **Debit/ATM**-கார்டுகள் அனைத்து வங்கிகளின் **CTS Cheque** -கள் மூலமாக பல்கலைக்கழக வளாகத்திலேயே செலுத்த தேவையான வசதிகளும் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| கல்விக்கட்டணம் (முதல் ஆண்டிற்கு) | - | ரூ. 25,000/- |
| முன்னாள் மாணவ சங்க நிதி (**Alumni fee**) | - | ரூ. 200/- |

**Recognition fees:** (உரிய மாணவர்களுக்கு மட்டும்)

| | | | |
|---|---|---|---|
| 1. | இளநிலை பட்டப்படிப்பு (**U.G.**) பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் படித்திருந்தால் | - | இல்லை |
| 2. | இளநிலை பட்டப்படிப்பு (**UG.**) தமிழ்நாட்டில் உள்ள பிற பல்கலைக்கழகத்தில் பயின்ற மாணவர்களுக்கு) | - | ரூ. 200/- |
| **3.** | இளநிலை பட்டப்படிப்பு (**U.G.** ) வெளி மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகங்களில் பயின்ற மாணவர்களுக்கு | - | ரூ. 500/- |

விண்ணப்பத்தில் தாங்கள் குறிப்பிட்டுள்ள தகவல்கள் மற்றும் சான்றிதழ்களின் உண்மைத்தன்மையின் அடிப்படையில் கலந்தாய்வுக்கு அழைக்கப்பட்டுள்ளது. தாங்கள் குறிப்பிட்டுள்ள தகவல்கள் தவறானவை என்று தெரியவந்தால் தங்களது சேர்க்கையை ரத்து செய்ய பல்கலைக்கழகத்திற்கு அனைத்து உரிமையும் உண்டு எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இயக்குநர் (பொ)

பெறுநர்

தொடர்புடைய மாணவ / மாணவியர்கள்